[26th April 1960

Tamil Nad Polytechnic, Madurai

* 821 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the measures taken and the schemes implemented to develop the Tamil Nad Polytechnic at Madurai town; and

(*b*) whether the Government are aware that a number of students studying there including Scheduled Castes and Backward Classes are suffering for want of accommodation in the existing hostel ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

SRI A. V. P. ASAITHAMBI : மேஜையின்மீது வைக்கப்பட்ட அறிக்கையில் தமிழ் நாடு பாலிடெக்னிக் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு முன் திராவிட நாடு பாலிடெக்னிக் என்று இருந்தது. அந்தப் பெயர் என் மாற்றப்பட்டது ? அதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விவரம் இப் பொழுது என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து பதில் சொல்லுகிறேன்.

SRI V. SANKARAN : 1959–60-ம் வருஷ ஆரம்பத்தில் பல பின் தங்கியவர்கள், பல ஷெடியூல் காஸ்ட்ஸ் மாணவர்களுக்கு அங்கே இடம் கிடைக்காமல் அதாவது ரெசிடென்ஷியல் ஸ்காலர்ஷிப்கள் கிடைக்காமல் இருந்தது. அப்படிப்பட்ட வசதியை பூர்ணமாக பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னொரு ஹாஸ்டல் கட்டுவதாக திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு பணமும் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

SRI T. T. DANIEL : May I know the strength of accommodation in the existing hostel ?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is provision for 120 students in the existing hostel. It is proposed to construct another hostel for the accommodation of another 192 students.

SRI M. K. SOMASUNDARAM : ஹாஸ்டலில் இடம் கிடைக்காத காரணத்தால் ஹரிஜன மாணவர்கள் ஹோட்டல்களில் தங்கி சாப்பிட்டு வந்தார்கள். அதனால் அவர்கள் அங்கு பணம் கட்ட வேண்டியதாக இருந்தது. அப்படிக் கட்டியதால் கடன் பட்டிருக்கிறார்கள். வருஷக் கடைசியில் அந்தக் கடன் பணத்தைக் கட்டுவதற்கு அந்தப் பணத்தை சாங்க்ஷன் செய்வதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி ஹரிஜன இலாகா மந்திரிக்குப் போட வேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : திராவிட நாடு எது என்ன என்று தெரியாமல் இருக்கும்போது இன்பக் கனவு கண்டு நினைத் துக்கொண்டிருந்தால் ஒரு காரியமும் ஆகாது, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல் இருக்கும். அது போல் அந்தப் பெயரை வைக்க முடியவில்லையாகும் அல்லவா ? அப்படிப்பட்ட பெயர் இந்தப் பக்கத்தில் இருக்க முடியாது அல்லவா ? பக்கத்திலிருந்து வருகிறவர்களுக்கு இந்த மாகாணப்பெயர் இருக்க வேண்டியது அவசியம் அல்லவா ?

MR. SPEAKER : இந்தக் கேள்வி அவுட் அப் ஆர்டர்.

---

[a] Printed as Appendix I on page 516 infra.

26th April 1960]

SRI K. VINAYAKAM : திராவிட நாடு பாலிடெக்னிக் என்ற பெயரை வைத்தால் மற்ற ராஜ்யங்களிலிருந்து வரக்கூடிய மாணவர்கள் இங்கு சேர்ந்து படிக்க வசதி இல்லாமல் போய்விடும் என்றும், தமிழ் நாடு பாலிடெக்னிக் என்ற பெயரை வைத்தால் பக்கத்திலுள்ள ராஜ்ய மாணவர்கள் வந்து சேர்ந்து படிக்க வசதி ஏற்படும் என்ற சூழ் நிலையில் அரசாங்கம் அதன் பெயரை மாற்றி வைத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஒரு ஆராய்ச்சிக் குழு நியமித்து அதை எப்படி மாற்றுவது என்பதைப்பற்றி யோசிக்கப்படும்.

Polytechnic for Girls

* 822 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் பெண்களுக்கென பாலிடெக்னிக் ஏற்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விபரமென்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : பெண்களுக்கு தொழில் கல்வி பயிற்சி அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறதா ? இப்பொழுதுள்ள தொழில் பயிற்சி பள்ளிகளில் பெண்கள் சேர்ந்து படிக்க வசதி செய்து கொடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: பெண்களுக்கு தொழில் கல்வி பயிற்சி அவசியம்தான். அதனால் பாலிடெக்னிக்கில்தான் சேர்ந்து படிக்கவேண்டும் என்பது இல்லை. எந்த பாலிடெக்னிகில் வேண்டுமானாலும் அவர்கள் சேரலாம். இப்பொழுது அவர்களுக்குத் தான் சகல உரிமைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறதே. அதனால் அவர்கள் எதில் வேண்டுமானாலும் சேரலாம். பாலிடெக்னிக்கில் ஒருவரும் இது வரையிலும் வந்து சேரவில்லை.

Government publications

* 823 Q.—SRI M. P. SARATHI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இந்த அரசாங்கமே நடத்தும் மாத இதழ்கள், மாதமிருமுறை இதழ்கள், வார இதழ்கள் எவை எவை ?

(ஆ) சுமார் எவ்வளவு பிரதிகள் ?

(இ) அவைகளை வெளியிட ஆகும் செலவு என்ன ?

(ஈ) சந்தாவாக கிடைக்கும் தொகை எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) *to* (*d*) The particulars are not readily available. A statement will be placed on the table of the House as soon as the particulars are gathered.

SRI A. V. P. ASAITHAMBI : அரசாங்கம் ஒவ்வொரு இலாகா செய்திகளை வெளியிடுவதில் பலவிதமான பத்திரிகைகள் செய்தி தாள்கள் மூலமாக வெளியிடப்படுகிறது. அப்படி வெளியிடுவதைவிட மாதம் ஒன்று அல்லது மாதம் இரு முறை என்கிற மாதிரி ஒரு இதழை அது அதிகப்படியான விலை வைத்தாலும் சரி, வெளியிட்டு அதில் எல்லா இலாகாவின் செய்திகளையும் வெளியிடுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ? அப்படிச் செய்வதால் செலவு குறைவாக இருக்கும் அல்லவா? அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்களே பிரிதிகளை அதிக விலைக்கு விற்க வேண்டும் என்று சொல்லுகிறார். சிலருக்கு சில விஷயங்களில்தான் அக்கரை இருக்கும். அப்படி